[18th September 1958

The Hon. Sri M. A. MANICKAVELU : அந்த முறையிலும் சிகிச்சை தீவிரமாக செய்யப்பட்டு வருகிறது.

Sri M. K. SOMASUNDARAM : ஒவ்வொரு ஜில்லாவிலும் குஷ்டநோய் ஆஸ்பத்திரி இருந்தும், பஸ் ஸ்டாண்டுகளில் குஷ்ட நோயாளிகள் அலைந்துகொண்டிருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அப்படியானால் அவர்களை ஆஸ்பத்திரியில் சேர்ப்பதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா ?

Mr. SPEAKER : இது ஒரு பொது கேள்வியாக இருக்கிறதே ?

The Hon. Sri M. A. MANICKAVELU : முன்பு ஒரு காலத்தில் இம்மாதிரி பஸ் ஸ்டாண்டில் குஷ்ட நோயாளிகள் அலைந்து கொண்டிருக்கலாம். இப்பொழுது அது மிகவும் குறைவு.

Sri A. CHIDAMBARANATHA NADAR : கொளச்சல் குஷ்டரோக ஆஸ்பத்திரியை சர்க்கார் எடுத்து நடத்துவதற்கு யோசனை உண்டா ?

The Hon. Sri M. A. MANICKAVELU : இப்பொழுது தனியார் துறையிலே இது நடந்துகொண்டிருக்கிறது. அதை நன்றாக ஒழுங்குபடுத்தி நடத்தினாலே போதும்.

Sri T. S. RAMASWAMY PILLAI : இந்த ஆஸ்பத்திரி பற்றி புகார் வந்ததாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். நல்ல முறையில் இந்த ஆஸ்பத்திரி நடந்துகொண்டு வருகிறது என்று அங்கெல்லாம் சொல்லுகிறார்கள். ஆகவே, எங்கே, யாரிடமிருந்து எத்தகைய புகார் வந்தது என்பதை அமைச்சர் அவர்கள் சொல்லுவார்களா ?

The Hon. Sri M. A. MANICKAVELU : ஒரு ஆஸ்பத்திரி இம்மாதிரி நல்ல முறையில் சிகிச்சை செய்வது நல்லதுதான். அப்படி செய்கின்ற வகையிலே சில தில்லுமுல்லான விஷயங்கள் நடந்துகொண்டு வருகின்றன என்று புகார் வந்திருக்கிறது.

Sri T. SAMPATH : Sir, may I know the basis on which these grants are generally given to these hospitals?

The Hon. Sri M. A. MANICKAVELU : On a capitation basis.

Sri A. GOVINDASAMY : இந்த ஆஸ்பத்திரியில் நோயாளிகள் வராமலே பணம் வாங்கப்படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கொளச்சல் பகுதியிலிருந்து ஒரு அமைச்சர் வந்திருப்பதால், அந்தப் பகுதியிலுள்ள இந்த ஆஸ்பத்திரிக்கு அந்த அமைச்சர் விஜயம் செய்து இந்த புகார் உண்மைதானா என்பது பற்றி விசாரித்து அரசாங்கத்திற்கு அறிக்கை சமர்ப்பிப்பார்களா ?

Mr. SPEAKER : I do not think the Hon. Minister is going to reply to it.

Leprosy.

*274 *Q.*—Sri N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the Government have received any representation from the people of Ayigoundenpalayam, Perundurai firka of Erode taluk, during 1958, regarding prevalence of leprosy in the villages; and

(*b*) if so, the action taken by the Government to control the disease?

18th September 1958]

THE HON. SRI M. A. MANICKAVELU : (a) No. Sir. The Government have, however, received a communication from the hon. Member in the matter.

(b) A survey was conducted in the three villages of Ayigoundenpalayam, Olapalayam and Thevampalayam villages. Nine cases of leprosy were detected in all the villages and necessary action has been taken for their treatment.

Corruption.

* 275 Q.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) the number of Government employees against whom criminal prosecutions have been undertaken by the Anti-Corruption Department for charges of corruption in 1957; and

(b) the number among them convicted?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) One.

(b) Nil.

SRI N. K. PALANISAMI : இப்பொழுது இருக்கக்கூடிய லஞ்ச ஒழிப்பு இலாகா புகார் வந்த பிறகுதான் அந்தப் புகாரை விசாரிக்கிறார்கள். எந்தெந்த இடத்தில் லஞ்சம் இருக்கிறது என்பதை விசாரித்து நடவடிக்கை எடுப்பது இல்லை. இம்மாதிரி வரும் புகார்களை விசாரிப்பதோடு, மற்ற இடங்களிலும் போய் லஞ்சம் இருக்கிறதா என்பதை விசாரித்து நடவடிக்கை எடுக்கும் வகையில் விதிமுறைகளை மாற்றி அமைக்க சர்க்கார் முன்வருமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : லஞ்சம் இருக்கும் இடத்திலிருந்து தகவல் வந்தால்தான் அங்கு போய் விசாரிக்க முடியும். அப்படியில்லாமல் ஜோஸ்யம் பார்த்து அதன் பேரில் ஒன்றும் நடவடிக்கை எடுக்க முடியாது. தகவல் வருவதுதான் புகார் என்று பெயர். புகார் இல்லாமல் லஞ்சம் இருக்கும் இடத்தில் போய் விசாரிப்பது சாத்தியமல்ல.

SRI M. KALYANASUNDARAM : மொத்தம் எத்தனை கேஸ்கள் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன ? ஒரு கேஸில் மட்டும்தான் பிராஸிகியூஷன் செய்யப்பட்டிருக்கிறது. ஏன் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அங்கத்தினர்களுக்கு ஒன்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். முக்கியமாக லஞ்ச கேஸ்களில் நேரடியான சாட்சியம் கிடைத்து, அதை கிரிமினல் கோர்ட்டில் நிரூபிப்பது மிகவும் கஷ்டம். ஆகவே இந்த கேஸ்களில் அநேகமாக 'டிபார்ட்மெண்டு ஆக்ஷன்' எடுக்கப்படுகிறது. அல்லது டிரிபியூனல் விசாரணைக்கு விடப்படுகிறது. எந்த கேஸில் நேரிடையான சாட்சியம் இருக்கிறது என்று தெளிவாக கருதப்படுகிறதோ, அந்தக் கேஸ்களில்மட்டும்தான் கோர்ட்டில் ''சார்ஜ் ஷீட்'' "பைல்" செய்யப்படுகிறது. ஆகையினால்தான் பிராஸிகியூட் செய்யப்பட்ட கேஸ்கள் குறைவாக இருக்கின்றன.

SRI V. K. KOTHANDARAMAN : லஞ்ச ஊழலை போக்குவதற்காக இருக்கும் இலாகாவில் இருக்கக்கூடியவர்களே லஞ்ச ஊழலில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பது சர்க்காருக்குத் தெரியுமா ? அப்படியானால் அதன்பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்த லஞ்ச ஊழலை நீக்குவதற்காக ஏற்பட்டிருக்கும் டிபார்ட்மெண்டிலேயே லஞ்சம் இருப்பதாக அங்கத்தினர் புகார் சொல்லுகிறார்கள். சில சமயங்களில் லஞ்ச ஊழலைப் பற்றி புகார் செய்பவர்களே லஞ்சத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். அதனால்தான் இதில் நடவடிக்கை எடுப்பது கஷ்டமாக இருக்கிறது. (சிரிப்பு.)